முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகர கழகத்தின் ஏற்பாட்டில் காந்தி பூங்கா அருகில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு மதிய உணவை முன்னாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் ஜெயங்கொண்டம் நகர கழக செயலாளர், நகர் மன்ற துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி மற்றும் நகர கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சோழவரத்தில் கலைஞர் பிறந்த நாள் விழா!

சென்னை, ஜூன் 10 – சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைபடி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு அலமாதி ஊராட்சி எடப்பாளையம் கிரா மத்தில் ஒன்றிய கழக செயலாளர் மீ. வே.கருணாகரன் தலைமையில் கழக கொடியேற்றி அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்திகழ்ச்சியில் மு.கீதாராமன், மு.தலைவர் கே.தமிழ்வாணன், எம்.முகமதுஅலி,அ.து மணி, டி.பத்மநாபன்,ராஜசேகர், மு.பாஸ்கர், கு.கலைவாணன், அன்பு, சன்சேகர், பக்கிரி, தாஸ், சுரேஷ் இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜெகன், சி.சிவசங்கரன், எம்.எஸ்.மணிகண்டன், ஆர்.ருபேஷ், எம்.சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்திகழ்ச்சியை மு.ஊ.ம.து.த. எம்.முனுசாமி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

திகா, ஆறுதல் பரிசு: ரூ.1500 நாகப்பட்டினம ஆ. சாதனா ஆகியோருக்கு வழங்கியும், கலந்து கொண்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் விவசாய தொழிலாளர் அணி தலைவர் கோவிந்தசாமி, துணை அமைப்பாளர்கள் லோகநாதன், இராஜேந்திரன், பாலசுப்பிரமணியன், செந்தில்குமார், தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பரமேஸ்வரி, செல்வமுத்துகுமரன், தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆத்மநாதன் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் மணிகண்டன், பழனி மலைச்செல்வன், கணேஷ்குமார், கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சோ. பா.மலர்வண்ணன் தலைமை!

திருக்குவளையில் 'சாதனை கலைஞர்' தலைப்பில் பேச்சுப் போட்டி!

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு என்.கௌதமன் பரிசுகளை வழங்கினார்!

நாகை, ஜூன் 10 - நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்தில் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சாதனை கலைஞர் என்ற தலைப்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி நடைபெற்றது, இந்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சிக்கு கீழையூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சோ.பா. மலர்வண்ணன் தலைமை தாங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.துரைராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.பாரி பாலன் வரவேற்றார். விழாவில் நாகை மாவட்டக் கழக செயலாளர் என். கௌதமன் கலந்து கொண்டு பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் பரிசு ரூ.10,000 மருதூர் தெற்கு இரா. அருண்குமார்க்கும், இரண்டாம் பரிசு: ரூ.7500 தகட்டூர் அகோ. அன்சிகா விற்கும், மூன்றாம் பரிசு: ரூ.5000 தாணிக்கோட்டகம் எஸ். தவ ஆதனுக்கும், சிறப்பு பரிசுகள் தலா ரூ.2500 சகானா , மருதூர் தெற்கு . கே.சக்திபாலா, திருக்குவளை அ. இளஞ்சேரன், சரபோஜிராஜபுரம் கார்த்தி எஸ்.பாண்டி, பி.பைந்தமிழன். ஆர்.நந்தகுமார், ஸ்ருதிபிரியா, ஜெகதீசன் மற்றும் பகுதி அமைப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கெங்கவல்லி பேரூர் தி.மு.க. சார்பில் பேரூர் செயலாளர் சு.பாலமுருகன் தலைமையேற்று கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்குமி மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரூர் நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துரை.செந்தமிழ்ச்செல்வன் தலைமையில்

கோவை மாநகர் மாவட்ட மாணவர் அணி கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் வி.சிவப்பிரகாஷ் அறிக்கை!

கோவை, ஜூன் 10 - கோவை மாநகர் மாவட்ட பகுதி கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வடகோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (*10.06.2026 - புதன் கிழமை*) மாலை 5.00 மணியளவில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவுறுத்தலின்படி, மாநில மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி வழிகாட்டுதலின்படி கோவை மாநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் தலைமையில், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் விஜி கோகுல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கோவை மாநகர் மாவட்ட பகுதி கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு "தமிழ்நாட்டின் நவீன சிற்பி" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்துவது சம்பந்தமாக மாணவர் அணி ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று கோவை மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.சிவப்பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, கழக விவசாய தொழிலாளர் அணி மாநில துணை அமைப்பாளர் த. சந்திரசேகரன் இல்லத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் புதுக்கோட்டை தெற்கு மாநகர 34வது வட்ட கழக நிர்வாகிகளான க. இராசேந்திரன், க. சந்திரசேகரன், காஜா மைதீன், அப்துல்லா, சௌக்கத் அலி, அகமது பாஸி, முருகேசன், மாதவன், முத்தழகு, யூசுப், சலீம், பிரகாஷ், அமானுல்லா, பாலா, பெரியசாமி, மகேந்திரன், செல்வக்குமார், பெருமாள், முத்துக்குமார், நிஷார், மாஹி, பாண்டி, அருள், செல்லத்துரை மற்றும் கார்த்திக் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சி.பி.எஸ்.இ. பொதுத்தேர்வில் முறைகேடு – சென்னையில்

அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பினர் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஜூன் 10 - சி.பி.எஸ்.இ தேர்வில் நிகழ்ந்த முறைகேடுகளை கண்டித்து, சென்னையில் உள்ள மண்டல அலுவலகம் அருகே அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பன்னிரெண்டாம் வகுப்பு சி.பி.எஸ்.இ பொதுத்தேர்வில் டிஜிட்டல் விடைத்தாள் மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

விடைத்தாளை திரையில் மதிப்பிடும் இந்த புதிய நடைமுறையால், தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு ஏராளமான மாணவர்கள் பாதிக்கப் பட்டனர்.

மேலும் டிஜிட்டல் மதிப்பீட்டு முறையில் பல்வேறு முறைகேடுகள் நிகழ்ந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதனிடையே 19 வயது இளைஞர் ஒருவர், சி.பி.எஸ்.இ மதிப்பீட்டுத் தளத்தில் உள்ள பாதுகாப்பு குறைபாட்டை பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் அம்பலப்படுத்தினார்.

இந்த நிலையில், சி.பி.எஸ்.இ தேர்வில் நிகழ்ந்த முறைகேடுகளை கண்டித்து, சென்னை அண்ணா நகரில் உள்ள மண்டல அலுவலகம் அருகே அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, சி.பி.எஸ்.இ மண்டல அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற மாணவர் கூட்டமைப்பினர் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புதுச்சேரி ஆர்.வி.ஜானகிராமன்

ஜூன் 10 (2019)

இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கி, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளராக பொறுப்பு வகித்து, மாநிலத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஐந்து முறை நெல்லித்தோப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்ற இவர், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். 1996ல் முதல்வராகி, மாநில முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

2005ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"எளிமைக்கு இலக்கணம் தேடினால் திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி. ஜானகிராமன் தான்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

"புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ந்து இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிட இயக்கத்தின் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் – ஓடி ஓடி உழைத்தவர் திரு ஜானகிராமன்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடலூர் கி. கோவிந்தராசன்

ஜூன் 10 (1998)



கடலூர் நகரத்தில் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் – திராவிடர் கழகம் இவற்றில் துவக்கக் கால உறுப்பினராக இருந்ததைத் தொடர்ந்து, தி.மு.கழகத்திலும் ஆரம்பகால உறுப்பினரானார்.

கடலூர் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 40 ஆண்டுகாலம் பணியாற்றியவர்.

நேருவுக்கு கருப்புக் கொடி, மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் ஆகிய இப்போராட்டங்களில் பங்கேற்று கடுங்காவல் சிறைதண்டனை பெற்றவர்.

தந்தை பெரியாரின் சீடராக – பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக – தலைவர் கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் கரத்தால் மிதிவண்டி பரிசு பெற்று, "அடிமட்டத் தொண்டனை கழகம் மதிக்கத் தவறாது" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மும்பை த.மு. பொற்கோ

ஜூன் 10 (2014)



இளம்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் சென்று கொள்கை வகுப்பு நடத்த உற்சாகத்தோடு உழைத்ததன் பயனாக மும்பைத் தமிழர்களின் நண்பராய், குடும்பத்தில் ஒருவராய் மதிக்கப்பட்டவர்.

1965ல் மகாராஷ்டிராவில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது,அவர்களுக்காக போராடியவர். அதேநேரத்தில் பால்தாக்கரே அவர்களுடன் நட்பு வைத்திருந்தவர். அதே பால்தாக்கரே, 2002ல் ஓர் விழாவில் 'சமுதாயச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி பாராட்டினார். 'தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு', 'தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு' ஆகிய அமைப்புகளை தொடங்கி, அதன் தலைவராக இருந்து மும்பைத் தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவர்.

"த.மு. பொற்கோ அவர் மும்பை மாநகரச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், என்னை அழைத்து பல நிகழ்ச்சிகளை நடத்தியதும், கழகத்திற்காக தேர்தல் நிதி திரட்டிக் கொடுத்ததும் என் நினைவுக்கு வருகிறது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.